## DEPOSITION OF WITNESS

IN THE COURT OF I ADDL.DISTRICT & SESSIONS JUDGE, THOOTHUKUDI.

Case No. S.C.No.74/2020.
Prosecution witness for P.W. 26 .

| | | | |
|---|---|---|---|
| Name | ... திரு. டேவிட் ஜோசப் பால்ராஜ். | Caste | ... |
| Father's/Husband Name | ... | Calling | ... |
| Village | ... | Religion | ... |
| Taluk | ... | Age | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 11.02.2026.

A2 died. A1 present.

<u>முதல் விசாரணை</u>

நான் தற்போது பாரதி ஏர்டெல் லிமிடெட் நிறுவனத்தில் நோடல் அலுவலராக பணிபுரிந்து 2022 டிசம்பரில் ஓய்வு பெற்றுவிட்டேன். 10.06.2019 அன்று மேற்படி பணியில் இருந்தபோது தூத்துக்குடி மாவட்டம் மெஞ்ஞானபுரம் காவல்நிலைய காவல் ஆய்வாளர் நிலைய குற்ற எண் 9/2019 வழக்கு சம்பந்தப்பட்ட கைபேசி எண் 7708312438 மற்றும் 9384382124, 9042539500 ஆகிய எண்களின் சிடிஆர் மற்றும் வாடிக்கையாளர் படிவம் ஆகியவற்றை வழங்கும்படி ஆய்வாளர் எங்களுக்கு கடிதம் அனுப்பியிருந்தார். அந்த கடிதம் **அ.சா.ஆ 22**. மேற்படி சிடிஆர் மற்றும் வாடிக்கையாளர் விண்ணப்ப படிவம் மற்றும் 65 பி பிரிவின் படியான சான்றிதழ் மேற்படி காவல்நிலையத்திற்கு அனுப்பினேன். இது சம்பந்தமாக ஆய்வாளர் என்னை விசாரித்தார். மேற்படி கைபேசி எண்களின் அழைப்புகள் குறித்த விபரங்கள் மற்றும் வாடிக்கையாளர்களின் படிவங்கள் அடங்கிய ஆவணங்களின் தொகுப்பு **அ.சா.ஆ 23**. மேற்படி பிரிவின் படியான சான்றிதழ் **அ.சா.ஆ 24**. 7708312438 என்ற கைபேசி எண் 1ம் எதிரி பெயரில் வழங்கப்பட்டுள்ளது.

9042539500 என்ற கைபேசி எண் 1ம் எதிரியின் மனைவி பயன்படுத்தி வந்ததாக விசாரணையில் தெரியவந்தது.

குறுக்கு விசாரணை

நான் ஆய்வாளரிடம் கொடுத்த வாக்குமூலத்தையும், எங்கள் அலுவலக ஆவணங்களையும் பார்த்து சாட்சியம் அளிக்கிறேன். மற்றபடி இந்த வழக்கு சம்பந்தமாக எனக்கு வேறு எந்த விபரமும் தெரியாது. மேற்படி கைபேசி எண்களை யார் படுத்தினார்கள் என்றும், யாருக்கு யாருக்கு இடையில் பயன்படுத்தப்பட்டது என்றும் எனக்குத் தெரியாது. மேற்படி எண்களில் பதிவாகும் அழைப்புகளின் எண்கள் எங்கள் தலைமை அலுவலகம் உள்ள அதாவது டெல்லியில் உள்ள சர்வரில் பதிவாகும் என்றால் சரிதான். அதனால் நான் நோடல் அலுவலர் என்ற முறையில் டெல்லி அலுவலகத்திற்கு தகவல் சொல்லி சிடிஆர் விபரங்களை பெற்றுத்தான் தாக்கல் செய்ய முடியும் என்றால் சரியல்ல. நோடல் அலுவலர் என்ற முறையில் நான் சென்னையில் இருந்தே சர்வரில் உள்ள அழைப்பு பதிவுகளை பார்க்க முடியும். அ.சா.ஆ 24 சான்றிதழ் யாரால் வழங்கப்பட்டது, எந்த தேதியில் வழங்கப்பட்டது என்ற விபரம் இல்லை என்றால் சரிதான்.

Taken down before me in open court, in the presence of the Accused read over to the witness and admitted by the deponent to be correct

MUNISWAMI THANDAVAN Digitally signed by MUNISWAMI THANDAVAN Date: 2026.02.11 18:11:07 +0530

I Additional District& Sessions Judge,
Thoothukudi.